 ISSN: 2454-3993

# தொல்காப்பியத்தில் வெளிப்படும் பண்பாட்டுப் பதிவுகள்

***முனைவர் ச. ஸ்டாலின் சத்தியா***
*உதவி பேராசிரியர், தமிழ்த்துறை*
*அன்னை வேளாங்கண்ணி கல்லூரி*
*தொலையாவட்டம்*

தமிழ் இலக்கியம் பழமைக்கு பழமையாய் புதுமைக்கு புதுமையாய் திகழ்கின்றது. தொட்டனைத் தூறும் மணற்கேணி போல கற்குந்தோறும் புதிய புதிய கருத்தும் அழகும் காட்டிக் கற்போர் உள்ளத்தை அள்ளும் பெருமை பெற்றது. தமிழில் தோன்றிய முதல் இலக்கண நூல் தொல்காப்பியம் ஆகும். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த பழந்தமிழர்களின் வாழ்வியலை புடமிட்டுக் காட்டும் கருத்துப் பெட்டகமாக அமைந்துள்ளது. நமது பண்பாட்டை, நாகரீகத்தை உலக மக்களுக்கு பறைசாற்றுவதற்கு பெரிதும் துணைசெய்வது தொல்காப்பியம் ஆகும். தொல்காப்பியர் வாழ்ந்த காலப் பண்பாடுகளை வெளிப்படுத்தும் விதமாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

**பண்பாடு – விளக்கம்**

பண்பாடு என்பது மனித இனத்தின் படிநிலையின் அடையாளமாகவும் ஒரு சமுதாயத்தின் தொன்மையினை இனம் காட்டுவதாகவும் அமைகிறது. பண்பாடுகள் குறித்த வரையறைகள் பின்வருமாறு அமைந்துள்ளது. அவை,

"பண்பாடு என்பது ஒழுகலாறு தொடர்பான நெறிகளையும், விழுமியங்களையும், வழக்காறுகளையும் கொண்ட ஒரு சிக்கலான தொகுதி" என வாழ்வியல் களஞ்சியம் எடுத்துரைக்கின்றது.

"குறிப்பிட்ட இடத்து மக்களின் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும், கலைகளும், சிந்தனையை வெளிப்படுத்தும் முறைகளும், மக்களின் சிந்தனை வெளிப்பாடு உடையதே பண்பாடு" என்று தமிழ் அகராதி கூறுகிறது.

**விருந்தோம்பல்**

இல்லற மகளிர்க்கு இன்றியமையாது இருக்க வேண்டிய பண்புகளில் ஒன்றாக விருந்தோம்பல் இருக்க வேண்டும் என்று தொல்காப்பியர் வலியுறுத்துகின்றார். இதனை,

**"விருந்துபுறந் தருதலுஞ் சுற்றம் ஓம்பலும்**
**பிறவு மன்ன கிழவோள் மாண்புகள்" (தொல். பொருள். களவு.11:3-4)**

என்ற நூற்பா மூலம் உணரலாம்.

"விருந்தோம்பல்" என்பதற்குப் பின்வருமாறு விவேக சிந்தாமணி விளக்கம் கொடுக்கின்றது.

**விருந்தினன் னானனொருவன் வந்தெரிதிரின்**
**வியத்தனன் மொழியினி துரைத்தல்**
**விருந்துற நோக்கல் வருகெனவுரைத்த**
**லெழுதல் முன்மகிழ் வன செப்பல்**
**பொருந்து மற்றவன்றன ருகுற விருத்தல்**
**போமெனிற்பின் செல்வதாதல்**
**பரிந்துநன் முகமன் வழங்களிவ் வொன்பா**
**னொழுக்கமும் வழிபடும் பண்பே (விவேக.சிந்:2.55)**

விருந்தினர் ஒருவர் மற்றொருவர் இல்லத்திற்கு வந்து எதிரே நின்றால், அந்த வீட்டின் உரிமையாளர் விருந்தினரின் வரவைப்பற்றி வியப்படைதல், நல்ல சொற்களைக் கூறுதல், இனிமையாக எடுத்தியம்புதல், விருப்பத்துடன் நோக்கல், வருக வருக என வரவேற்றல்,

விருந்தினரைக் கண்டவுடன் எழுந்து மரியாதை செய்தல், அவர் எதிரே நின்று மகிழ்ச்சியான செய்திகளைக் கூறல், வந்த விருந்தினருடன் அன்போடு அமர்ந்து பேசுதல், விருந்து உண்ட பின் போய் வருகிறேன் என்று கூறிச் செல்லும் விருந்தினரைச் சிறது தொலைவு கூடவே சென்று அனுப்பி வைத்தல் போன்ற செயல்களை உடையனவாய் விருந்தோம்பல் அமையும் என்று கூறுகின்றது.

தொல்காப்பியர் 'விருந்து' என்பதற்கு 'புதுமை' (தொல். பொருள். செய். 231) என்கிறார். இல்லத்திற்கு வந்த புதியவர்களுக்கு உணவளித்து உபசரிக்கும் பழக்கம் அன்பின் அடிப்படையில் எழுந்து, பின் அது இல்லறப் பண்பாடாக வளர்ந்துள்ளது.

**மடல் ஏறுதல்**

காதல் என்பது மனித வாழ்வில் மிகவும் இன்றியமையாத உணர்வு. அந்த உணர்வினை தலைவனும், தலைவியும் உண்மையாக உணர்ந்து கொள்ளுகின்ற போது எந்த ஒரு மன வேறுபாடும் இல்லாமல் திருமணம் செய்து கொள்வார்கள். ஆனால் முரண்பாடுகள் தோன்றும் போது அந்த முரண்பாட்டைத் தவிர்க்க தலைவன் தன் காதலை ஊரார் தெரிந்து கொள்ளும் விதமாக மடல் ஏறும் வழக்கம் தொல்காப்பியர் காலத்தில் இருந்தது. அதனைத் தொல்காப்பியர்,

**"நீக்கலின் ஆகிய நிலைமையும் நோக்கி**
**மடன்மா கூறும் இடன்மார் உண்டே" (தொல். பொருள். களவு.11:19-20)**

தனது தலைவியை வீட்டைவிட்டு வெளியே அனுப்பாமல் பெற்றோர் இற்செரிப்பதனால் தலைவன் வெளிப்படையாக மணம் செய்துகொள்ளல் பற்றி தோழியின் வாயிலாக தலைவியின் தமர்க்கு அறிவிக்கின்றான். தலைவனுக்குத் தலைவியை மணம் செய்து கொடுக்காவிடில் மடல் ஏறுவதாகச் சொல்லும் இடங்களும் உண்டு என்கிறார்.

மேலும் மடல் ஏறுதல் பெண்களுக்கு இல்லை என்ற கருத்தையும் முன் வைக்கின்றார். அதனை,

**"எத்திணை மருங்கினும் மகடூஉ மடல்மேல்**
**பொற்புடை நெறிமை இன்மையான" (தொல். பொருள். அகத்.38)**

எனத் தெளிவாக விளக்குகின்றார்.

**பிரிவு**

தொல்காப்பியர் பிரிவினை மூன்று நிலைகளில் விளக்கி உள்ளார். தலைவன் தலைவியைக் கல்வி, பகை, தூது ஆகிய காரணங்களுக்காகப் பிரிவான் என்கிறார். இதனைத் தொல்காப்பியர்,

**"ஓதல் பகையே தூது இவை பிரிவே" (தொல். பொருள். அகத். 27)**

விளக்கியுள்ளார். மேலும் பொருளின் காரணமாகவும் பிரிவு உண்டு என்பதை விளக்குகின்றார்.

**"பிழைத்து பிழையா தாகல் வேண்டியும்**
**இழைத்த ஒண்பொருள் முடியவும் பிரிவே" (தொல். பொருள். அகத். 30:3-4)**

என்று பிரிவின் இன்றியமையாமையை விளக்குகின்றார்.

**போர்**

உலகில் மனிதவாழ்வு இரு பிரிவுகளாக அமைவதைக் காணலாம். மனைக்குரிய வாழ்வினை 'காதல்' என்றும், வெளி உலக வாழ்வினை 'புறம்' என்றும் வகைப்படுத்தினர்.

போர் தொடங்கும் முன் பகைநாட்டில் உள்ள அறவோரையும், தன் நாட்டில் உள்ள அறவோரையும் அழிவிலிருந்து பாதுகாக்க வேண்டும் என்பது மரபு. அவ்வகை நாட்டில் உள்ள பசு, அந்தணர், பெண்கள், நோயுடையோர் ஆகியோர்களை முரசு முழக்கிப் பாதுகாப்புத் தேடிக் கொள்ளச் செய்ய வேண்டும் என்பது தொல்காப்பியர் காலப் பண்பாடாகும். ஆனால் இன்றைய உலகில் எதனையும் பொருட்படுத்தாமல் மனித நேயம் பேணாமல் போர் என்ற பெயரில் இனப்படுகொலைகள் அரங்கேறுவதைக் காணலாம். புறத்திணையில் வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண், காஞ்சி எனும் ஏழு திணைகளைத் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். இவற்றில் முதல் நான்கும் போருக்குரியவை. வாகை, பாடாண், காஞ்சி என்பன போரோடு மட்டுமல்லாது பிற செய்திகளையும் வெளிப்படுத்துகின்றது.

**ஐந்நில பாகுபாடுகள்**

உலகில் எந்த மக்களும் பெற்றிராத முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை என்ற நிலப் பாகுபாட்டினை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நம் தமிழர்கள் பெற்றிருந்தனர் என்ற சிறப்பினை அறிந்து கொள்வதற்கு நமக்கு துணை செய்வது தொல்காப்பியம் ஆகும். மேலும் ஐந்து நிலங்களுக்கும் உரிய தெய்வங்களையும் சுட்டுகின்றார். இதனைத் தொல்காப்பியர்,

**"மாயோன் மேய காடுறை உலகமும்**
**சேயோன் மேய மைவரை உலகமும்**
**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**
**வருணன் மேய பெருமணல் உலகமும்**
**முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்**
**சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே" (தொல். பொருள். அகத்.5)**

திருமால் பொருந்தியிருக்கும் காடு சார்ந்த நிலமும் (முல்லை), முருகன் பொருந்தியிருக்கும் இனிய நீர், வயல் சூழ்ந்த நிலமும் (குறிஞ்சி) இந்திரன் பொருந்தியிருக்கும் இனிய நீர் நிலைகள் சூழ்ந்த நிலமும் (நெய்தல்), பாலைத் திணைக்கு என்று தனிப்பட்ட நிலம் இல்லை என்று அழகாக வரையறை செய்கின்றார்.

**முடிவுரை**

மனித வாழ்வின் எச்சங்களாக விளங்குபவை பண்பாடுகள் ஆகும். பண்பாடு எந்த சமுதாயத்தில் இல்லையோ அந்த சமுதாயத்தால் தன்னை நிலைநிறுத்திக் கொள்ளமுடியாது. தமிழ்ச் சமுதாயம் பல பண்பாட்டு எச்சங்களை சுமந்து உலகிற்கே ஒளி விளக்காகத் திகழ்ந்து கொண்டிருக்கின்றது. அந்த வகையில் தொல்காப்பியர் வாழ்ந்த காலச்சூழலில் அமைந்த விருந்தோம்பல், மடல் ஏறுதல், பிரிவு, போர், ஐந்நில பாகுபாடுகள் என்ற பண்பாட்டுப் பதிவுகளை புடமிட்டுப் பார்க்கும் விதமாக இக்கட்டுரை அமைந்துள்ளது. உலகில் உள்ள அனைத்து மக்களின் பண்பாட்டின் ஆணிவேராகத் திகழும் தமிழர் பண்பாடு நிலைபெற வேண்டுமானால் நாம் கடந்து வந்த பாதையை மறந்து விடாமல் தொல்காப்பியர் காண விளைந்த சமத்துவ சமுதாயத்தை உருவாக்க நாம் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்படும் போது வானம் வசப்படும்.